# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.31] CHENNAI WEDNESDAY, AUGUST 11,2010**

**Aadi 26, Thiruvalluvar Aandu-2041**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதி /16 / 8, 20–07–2010 நாளிட்டது )

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறைவிதிகளிலிருந்து செய்யப்படும் எரிசக்திக் கொள்முதல் பற்றி 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 61(h) மற்றும் 86(1)(e) பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி குறித்துரைத்துள்ளது மற்றும் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 27 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும்,

மற்றும் மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியம் எனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தங்கள், முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டிருப்பதாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 61(h) மற்றும் 86(1)(e) பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2008ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து மின்கொள்முதல் செய்வதற்காக 2008ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.ந.மி.ஒ. / ம.சா. எ.ஆ. ஒழுங்குமுறைவிதி (NCES Regulation) / 16/1இன்படி பிறப்பிக்கப்பட்டு மற்றும் 2008 பிப்ரவரி 27ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2இல் அது வெளியிடப்பட்டிருப்பதாலும், இதன்மூலம், பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது.

<u>திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்</u>

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் . –**

அ) இந்த விதித்தொகுப்பு, 2010ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று அழைக்கப்பெறும்.

ஆ) இவை 2010ஆம் ஆண்டு மே 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. <u>முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் . –</u>

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியில், முதலாம் வாக்கியத்திற்குப் பதிலாக பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும் : –

*“பிரிவு 4(3)–ல் குறிப்பிடப்பட்டவாறு, ஒவ்வொரு வகையான புதுப்பிக்கத்தக்க ஆதாரத்திலிருந்து மின் பகிர்மான உரிமம்தாரரால் கொள்முதல் செய்யப்படும் மின்சாரத்திற்காக பொது அல்லது குறித்தவகை ஆணை வாயிலாக ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் மின்கட்டணவீதமானது, ஆணையத்தினால் பிறப்பிக்கப்படும் அத்தகைய மின்கட்டணவீத ஆணைகளில் குறித்துரைக்கப்படும் காலஅளவிற்கு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் ”.*

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ரா. வெ. ராஜா**
செயலாளர்